## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் அறிவித்தல்

**2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் கல்வியாண்டு 2020/2021 இல் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க எதிர்பார்த்திருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான அறிவித்தல்**

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களின் கீழ் தோற்றிய மாணவர்கள் தொடர்பாக SC (FR) 29/2012 இலக்க உயர் நீதிமன்ற மனு மீது உயர்நீதிமன்றினால் வழங்கப்பட்ட பணிப்பிற்கு அமைய 2020 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குப் புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களின் கீழ் தோற்ற இருக்கின்ற மாணவர்களை இரு வேறுபட்ட குடித்தொகையினராகக் *(two distinct populations)* கருத்திற் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமை இத்தால் அறியத் தரப்படுகிறது. எனவே 2020 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் Z-புள்ளியின் அடிப்படையில் 2020/2021 ஆம் கல்வியாண்டிற்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவை எவ்வாறு செய்வது என்பது குறித்த தெரிவுப்பிரமாணங்களை முன்மொழிவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை (*Committee of Experts*) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழங்கள் சட்டத்தின் 15 (vii) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிகள் குழுவினது ஆலோசனையையும் பெற்ற பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குப் <u>புதிய பாடத்திட்டத்தின்</u> கீழ் தோற்றவிருக்கின்ற மாணவர்களிலிருந்து பல்கலைக்கழகப் பட்டநிகழ்ச்சித்திட்டம் (கற்கைநெறி) ஒன்றினைப் பயில்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட திறமை மற்றும் தீவளாவிய திறமை அடிப்படைகளில் அனுமதிக்கப்பட இருக்கின்ற மாணவர்களின் சதவீதமானது, 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலப்பகுதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு <u>முதலாம் மற்றும் இரண்டாம் தடவைகள்</u> தோற்றி முறையே குறித்த மாவட்டத்திலிருந்து மாவட்ட திறமை மற்றும் தீவளாவிய திறமை அடிப்படைகளில் குறித்த பட்டநிகழ்ச்சித் திட்டத்தினைத் (கற்கைநெறியை) தொடர்வதற்காக பல்கலைக்கழகங்களுக்கு

அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் கூட்டிணைவான சராசரியின் *(composite average)* சதவீதமாக அமையும்.

- 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் <u>பழைய பாடத்திட்டத்தின்</u> கீழ் தோற்றவிருக்கின்ற மாணவர்களிலிருந்து பல்கலைக்கழகப் பட்டநிகழ்ச்சித்திட்டம் (கற்கைநெறி) ஒன்றினைப் பயில்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட திறமை மற்றும் தீவளாவிய திறமை அடிப்படைகளில் அனுமதிக்கப்படவிருக்கின்ற மாணவர்களது சதவீதமானது, 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலப்பகுதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு <u>மூன்றாவது தடவை</u> தோற்றி முறையே குறித்த மாவட்டத்திலிருந்து மாவட்ட திறமை மற்றும் தீவளாவிய திறமை அடிப்படைகளில் குறித்த பட்டநிகழ்ச்சித் திட்டத்தினை (கற்கைநெறியை) தொடர்வதற்காக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் கூட்டிணைவான சராசரியின் *(composite average)* சதவீதமாக அமையும்.

இதன்பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் Z-புள்ளியின் அடிப்படையில் 2020/2021 ஆம் கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதானது மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் தீர்மானங்களுக்கு ஏற்பவும் 2020/2021 கல்வியாண்டிற்கான "இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி" என்ற கைநூலுடன் வழங்கப்படும் சட்ட மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்பவும் மேற்கொள்ளப்படும்.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு 07
07.10.2020